### திருப்பூர் மாவட்டத்தில் பேருந்து விபத்து!

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப். 7-

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி, செங்காளிபாளையம் கிராமம், சாம்ராஜ் பாளையம் பிரிவில் தனியார் பேருந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு - ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு:

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், கோவை - சேலம் தேசிய நெடுஞ்சாலை, செங்காளிபாளையம் கிராமம், சாம்ராஜ்பாளையம் பிரிவில் நேற்று (6.2.2025) காலை சுமார் 8.45 மணியளவில் திருப்பூரிலிருந்து ஈரோடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த TN34T4050 என்ற பதிவெண் கொண்ட தனியார் பேருந்து ஒன்று அதே திசையில் முன்னால் சென்ற கண்டெய்னர் லாரியைக் கடந்துசெல்ல முயன்றபோது எதிர்பாரா தவிதமாக நிலை தடுமாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணம் செய்த திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், விருமாண்டம்பாளையம், தில்லை நகரைச் சேர்ந்த திரு.பெரியசாமி (வயது 19) த/பெ.சந்திரன் மற்றும் குன்னத்தூர் கிராமம், சுண்டக்காம்பாளையத்தைச் சேர்ந்த திரு.ஹரிகிருஷ்ணன் (வயது 19) த/பெ.செந்தில்குமார் ஆகிய இரண்டு கல்லூரி மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியை கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# புழல், திருமூலநாதசுவாமி கோயிலில் அன்னதானம் வழங்கும் திட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப்.7-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (06.02.2025) சென்னை, புழல், திருமூல நாதசுவாமி திருக்கோயிலில் நாள்தோறும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

2024-2025-ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற மானியக் கோரிக்கையில், "பக்தர்களுக்கு ஒருவேளை அன்னதானம் வழங்கும் திட்டம் இவ்வாண்டு மேலும் 6 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, மதுரவாயல், மார்க்கசகாயேஸ்வரர் திருக்கோயில், புழல், திருமூலநாத சுவாமி திருக்கோயில், திருச்சி மாவட்டம், லால்குடி, பிடாரி அய்யனார் திருக்கோயில், பெரம்பலூர், அபராதரட்சகர் திருக்கோயில். திருப்பூர் மாவட்டம், காரத்தொழுவு, அழகுநாச்சியம்மன் திருக்கோயில், கடலூர் மாவட்டம், தென்னம்பாக்கம், அழகர் திருக்கோயில் ஆகிய 6 திருக்கோயில்களில் தினந்தோறும் அன்னதானம் வழங்கும் திட்டம் இன்று முதல் தொடங்கி வைக்கப்பட்டது.

சென்னை, புழல், திருமூல நாதசுவாமி திருக்கோயிலில் நேற்று (06.02.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு அவர்கள் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். .

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள 13 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 764 திருக்கோயில்களில் ஒரு வேளை அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 3.5 கோடி பக்தர்கள் பயன்பெற்று வருவதோடு இதற்காக ரூ.120 கோடி செலவிடப்படுகிறது.

இந்நிகழ்வின்போது, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இணை ஆணையர்கள் சி.லட்சுமணன், திருமதி ஐ.முல்லை, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் எஸ்.நந்தகோபால், மாநகராட்சி உறுப்பினர்கள் பி.இராஜன், இ.சேட்டு, உதவி ஆணையர் கே.சிவகுமார், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ.ரவி, உறுப்பினர்கள் குணசேகரன், திருமதி லட்சுமி நீதிராஜன், செயல் அலுவலர் அ.குமரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை - பிராட்வேயில் புதிய திட்டப் பணிகள்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, பிப். 7-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (6.2.2025) துறைமுகம் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-5, வார்டு-57, ஜார்ஜ் டவுன், பிராட்வே சாலை, பிரகாசம் தெருவில் வருவாய் துறைக்கு சொந்தமான இடத்தில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய திட்டப்பணிகள் மேற்கொள்வதற்காக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு துறைமுகம் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-5, வார்டு-56, ஜார்ஜ் டவுன், பிராட்வே சாலை, பி.ஆர்.என் கார்டனில் கட்டப்பட்டு வரும் புதிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் ஆர்.பிரியா ராஜன், வருவாய்த்துறை கூடுதல் தலைமைச் செயலாளரும் பெ.அமுதா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். க.பிரபாகர், சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, மத்திய வட்டாரதுணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமலு, தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, வருவாய் அலுவலர் சு.கீதா, மண்டல அலுவலர் பரிதா பானு, மாமன்ற உறுப்பினர்கள் எம்.இசட்.ஆசாத், பரிமளம், தாஹா நவீன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாவட்ட துணை அமைப்பாளர்கள் - பகுதி - ஒன்றிய அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் அறிவிப்பு!

சென்னை,பிப்.7-

சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் அறிவிப்பு வருமாறு:

மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பகுதி துணை அமைப்பாளர் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்று உள்ளார்.

இது சம்பந்தமாக ஆலோசனை நடத்துவதற்கு 7.2.2025 இன்று மாலை 7 மணி அளவில் அவசர ஆலோசனை கூட்டம் எனது அலுவலகத்தில் நடைபெற உள்ளதால் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் ஒன்றிய அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : கூட்டத்தில் கலந்து கொள்ள வருபவர்கள் தங்களுடைய புகைப்படத்தையும் துணை அமைப்பாளர் புகைப்படத்தையும் கொண்டு வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தெரிவித்துள்ளார்.

### தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட பகுதிகளில்

# புதிய திட்டப்பணிக்கு அடிக்கல் - பணிகள் குறித்து ஆய்வு!

## மேயர் பிரியா மேற்கொண்டார்! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை,பிப்.7-

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட பகுதிகளில் புதிய திட்டப்பணியினை மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்து, நடைபெற்று வரும் பள்ளிக் கட்டடம் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.


மேயர் அவர்கள், வார்டு-44க்குட்பட்ட பாடசாலை தெரு, கக்கன்ஜி காலனியில் மேயர் மேம்பாட்டு நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள இரவு பாடசாலை மையம் மற்றும் மாணவர் திறன் மேம்பாட்டு மையக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பெரம்பூர், புதிய காமராஜர் நகர் சென்னை நடுநிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.4.59 கோடி மதிப்பில் தரைத்தளத்துடன் மூன்று தளங்கள் மற்றும் 2 குழந்தை மையங்களுக்கான கூடுதல் பள்ளிக் கட்டடக் கட்டுமானப் பணியினையும், மூலதன நிதியில் ரூ.86 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுச்சுவர் கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்புப் பணியினையும் பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, வார்டு-44 மற்றும் 71க்குட்பட்ட மேல்பட்டி பொன்னப்பன் தெருவில் வட சென்னை வளர்ச்சித் திட்ட நிதியில் ரூ.2.13 கோடி மதிப்பில் 635 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மேயர் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். டி.சேகர், வடக்கு வட்டார துணை ஆணையாளர் (பொ) கே. ஜெ. பிரவீன் குமார், , நிலைக்குழுத் தலைவர் (வரிவிதிப்பு (ம) நிதி) திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தொகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கை ஏற்று இராயபுரம் 53வது வட்டத்தில் உள்ள போஜராஜன் நகரில் அமைந்துள்ள புதிய நியாய விலை கடையை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி திறந்து வைத்தார். உடன் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ். மாமன்ற உறுப்பினர் திருமதி. வேளாங்கண்ணி, வட்ட செயலாளர்கள் கொரியர் முருகன், மண்டலம்–5 அதிகாரி திருமதி ஃபரிதா பானு, சென்னை மாநகராட்சி A பிரபுதாஸ், பிரபு ஆகியோர் உடன் இருந்தனர்.



தலைமைச் செயற்குழு உறுப்பினர் – கழகத்தின் மூத்த முன்னோடி இரா. நாகன் இயற்கை எய்தியதை முன்னிட்டு நேற்று (6.2.2025) காலை அவரது இல்லத்தில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தினார். மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மற்றும் சட்டத்துறை இணைச்செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், ஒன்றிய பெருந்தலைவர் ஆர்.டி.அரசு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கெ. ஞானசேகரன், டி.குமார், பி.எம்.சேகர், குமணன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – எஸ்.ரகுபதி– கே.ஆர்.பெரியகருப்பன் – அன்பில் மகேஷ் பொய்யாமொழி – சிவ.வீ.மெய்யநாதன் – கோவி.செழியன் முன்னிலை!

புதுக்கோட்டை பிப்.7,

முதலமைச்சர், தலைவர் தளபதி அவர்கள் நல்வாழ்த்துகளுடன், நினைவில் வாழும் "தனலட்சுமி லைட் ஹவுஸ்" மிசா க. ஆறுமுகம் - முன்னாள் மாநகர செயலாளர் ஆ. செந்தில் நல்லாசியுடனும், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் இல்லத் திருமண வரவேற்பு விழா, புதுக்கோட்டை (மாலையீடு) ஏடிஆர் மஹாலில் 9.2.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரை,

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மணமக்கள்: மாநகர இளைஞரணி அமைப்பாளர் செ. கணேஷ் சுப கஸ்தூரி ரெத்னா ஆகியோர் திருமண வரவேற்பு விழா நடைபெறுகிறது.

இவ்விழாவில், கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சிவகங்கை மாவட்ட செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே .ஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, எஸ். ராமச்சந்திரன், கே.என்.ரவிச்சந்திரன், சிவஸ்ரீ



பிச்சை குருக்கள் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கேகே. செல்லப்பாண்டியன் வரவேற்று பேசுகிறார்.

அருண் நேரு எம்பி, எம்.எம்.அப்துல்லா எம்பி, எஸ். கல்யாணசுந்தரம் எம்பி,துரை. வைகோ எம்பி, டாக்டர் வை. முத்துராஜா எம்எல்ஏ, காடுவெட்டி என். தியாகராசன் எம்எல்ஏ, துரை.சந்திரசேகரன் எம்எல்ஏ, எம்.சின்னத்துரை எம்எல்ஏ,திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் க.வைரமணி, டிகேஜி.நீலமேகம் எம்எல்ஏ,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு, ச.முரசொலி எம்பி, திருச்சி மாநகர மேயர் மு.அன்பழகன்,மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைபித்தன்,கழக சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் த.சந்திரசேகரன், துணை மேயர் எம். லியாகத் அலி, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம், அறந்தாங்கி இராஜன், இரா.துரைமாணிக்கம், மிசா சி.ராமநாதன், உரக்கடை எம். கருப்பையா,டாக்டர் ரகு. அண்ணாமலை, எஸ்.திருஞான சம்பந்தம், சுப.சரவணன், மாத்தூர் ஏ.கருப்பையா,பரணி ஈஏ.கார்த்திகேயன், புதுக்கோட்டை விஜயா, செ.அசோக் பாண்டியன், வி. என்.மணி, பிடி.அரசுகுமார், பேராவூரணி கார்த்திக், கேஆர்என். போஸ், க. மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, ஞான. இளங்கோவன், கீரை.தமிழ்ராஜா, தவ. பாஞ்சாலன், த. ஜெயலட்சுமி,அ. சுப்பிரமணியன், க.அடைக்கலம், அ.ஸ்ரீதேவி,ஜெ. அபுதாஹிர், எஸ்.ஜெயராமன்,கே. கலைமணி, இரா.ஆனந்த்,க.நைனா முகமது, உதயம் சண்முகம்,சக்தி ராமசாமி,தென்னங்குடி ராஜா, எஸ்.சையது முகமது,குடந்தை குட்டி, காஜமலை விஜி, கே.எஸ்.சந்திரன், கேபிகே.டி.தங்கமணி, அ. ரத்தினம், திருக்குவளை இள. மேகநாதன், எம்.எம். பாலு,புதுநகர் குமார், விழுப்புரம் கே.ஜனகராஜ்,

திருப்புல்லானி சிவசுப்பிரமணி,த. அப்புகாளை, காரைசி.ரவி,காலனி செந்தில், தஞ்சை மா. கோபாலகிருஷ்ணன், எஸ்.கண்ணன்,

மற்றும் புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட திமுக நிர்வாகிகள்: ஒன்றிய நகர மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் வெ. முத்துக்கிருஷ்ணன், மு.க.ராமகிருஷ்ணன், என்.சேட்டு, எம். பரமசிவம், மு.பி ம .சத்தியசீலன், ஆர்ஆர்எஸ்.மாரிமுத்து, ஓஎஸ்.வெங்கடாசலம், சி.சண்முகம், மா.தமிழ்ஐயா, அ. இளங்குமரன்,கேபி. ஐயப்பன், ஆர்ஆர்.சாமிநாதன், பொன்.ராமலிங்கம், எஸ்எம். சீனியார், பொன்.கணேசன், அ. அடைக்கலமணி, வி. பொன்துரை, அ.முத்து, அழகு என்ற சிதம்பரம், ஆர். கணேசன், விஆர்.இளையராஜா, கே.எஸ்.ரவி, அரு.வடிவேல், எஸ்.குமார் என்ற துரைக்கண்ணன், க.ராஜேந்திரன், வை. விஜயகுமார், உ. முருகேசன், ப. அண்ணாதுரை, எம்எஸ்ஏ. முகமது ரிஷா, அ.அழகப்பன், ஏ.நாசர் என்ற செந்தில்குமார், ஆ.பழனிகுமார், கேசி.சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள்: தென்னலூர் பழனியப்பன், என்.சாத்தையா, ராசு. சந்தோஷ், சிஆர்வி.சித்ரா, எம். செந்தில்குமார், ஆர். செல்லதுரை, சீனி. பழனியப்பன், கேஎம்.சுப்பிரமணியன், த.மணிராஜா, என்.வீரையா, ஆர்வி.செல்வம், க.கலைவாணி++++, தஞ்சை ஆசிரியர் இளங்கோ. ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் நன்றி தெரிவித்து பேசுகிறார்.

### சென்னை தெற்கு மாவட்ட

# கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு – எம்.எஸ்.ஹரிபாபு வேண்டுகோள்!

சென்னை, பிப்.7

சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெறுகிறது என்றும், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைகளை வழங்குகிறார் என்றும், மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிப் பேரவை சார்பில் மாவட்ட அமைப்பாளர் எனது (எம்.எஸ். ஹரிபாபு) தலைமையில், நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் சைதாப்பேட்டை, அப்துல்ரசாக் தெருவில் உள்ள எம்.எஸ்.பி.மினி ஹாலில் இன்று (07.02.2025 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் பங்கேற்று பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையை சார்ந்த மாவட்ட தலைவர், மாவட்டதுணைத்தலைவர், மாவட்டதுணை அமைப்பாளர்கள், பகுதிதலைவர், பகுதி துணைத்தலைவர், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எம்.எஸ்.ஹரிபாபு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சென்னை தெற்கு மாவட்ட துணைச் செயலாளர்

# பாலவாக்கம் மு.மனோகரன் தாயார் மு.பட்டம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் பாலவாக்கம் மு.மனோகரன் தாயார் திருமதி. மு.பட்டம்மாள் அவர்கள் (வயது 94) நேற்று 6.2.2025 வியாழக்கிழமை மாலை 5.55 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்ததும், கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தாயை இழந்து வாடும் பாலவாக்கம் மனோகரன் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர் ஆலோசனைக் கூட்டம் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு ஆவடியில் 8 ஆம் தேதி நடைபெறும் மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் எழுச்சி உரையாற்றுவதால் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்வது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், மா.ராஜ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், திருமதி. காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஆவடி மேயர் உதயகுமார், சன்.பிரகாஷ், ஜி.நாராயண பிரசாந்த், பேபி சேகர், பொன் விஜயன், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி டி. ராமகிருஷ்ணன், சே.பிரேம் ஆனந்த், என்.இ.கே.மூர்த்தி, ஜி.ஆர்.திருமலை, தி.வை.இரவி, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே சுரேஷ்குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் துர்கா பிரசாந்த் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்கள்